**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காட்பாடி**
**முன்னிலை – திரு. S.K.P. திலிப்பாபு, M.A., M.L.,**

**நீதிமன்ற நடுவர், காட்பாடி**

**2026–ம் ஆண்டு ஜூன் 01 ம் நாள் திங்கட்கிழமை**
**ஆண்டு பட்டிகை வழக்கு எண்.177/2024**
**CNR No. TNVL 24– 003900–2024**

அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
திருவலம் காவல் நிலையம்,
குற்ற எண்.573/2023,
U/s. 279, 304 A IPC

……குற்றமுறையிடுபவர்

//எதிராக//

தூர்கா, க/பெ. நேதாஜி
நெ.5–9–356, மேதரிதெரு, ,
பருவகிராமம் மற்றும் அஞ்சல்,
ஸ்ரீகாகுளம் மாவட்டம்.
ஆந்திரபிரதேசம் மாநிலம்.

……..குற்றஞ்சாட்டப்பட்ட நபர்

| Sl. No. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | எதிரியின் விவரங்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | பெயர் | தந்தையின்/ கணவர் பெயர் | தொழில் | இருப்பிடம் | வயது |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | திருவலம் காவல் நிலையம், குற்ற எண்.573/2023, U/s. 279, 304 A IPC | தூர்கா, | நேதாஜி | -- | நெ.5-9-356, மேதரிதெரு, ,பருவகிராமம் மற்றும் அஞ்சல், ஸ்ரீகாகுளம் மாவட்டம். ஆந்திரபிரதேசம் மாநிலம். | 33 |

S K P DILIP BABU Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.

| Date of | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்வு நாள் | புகார் கொடுத்த நாள் | எதிரியை கைது செய்த நாள் | எதிரியை பிணையில் விடுவித்த நாள் | சிறைக்கு அனுப்பிவைத்த நாள் | வழக்கு விசாரணை ஆரம்ப நாள் | வழக்கு விசாரணை முடிந்த நாள் | தண்டனை உத்தரவு | குற்றவாளிகள் மீதான தீர்ப்புரைக்குரிய தீர்வு முடிவின் நகலை ஒப்படைத்தல் | காலதாழ்விற்குரிய காரணம் |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 04.12.23 | 04.12.23 | -- | -- | -- | 24.03.25 | 25.05.26 | 01.06.26 | -- | No Delay |

இவ்வழக்கு கடந்த 24.12.2024 ம் தேதி அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு குற்றம் தொடுப்பவர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–II அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.மோகனவேல் என்பவர் முன்னிலையிலும் தரப்பினர்களைக் கேட்ட பின்னர் ஆவணங்கள் அனைத்தையும் பார்வையிட்டு பரிசீலனை செய்து இன்று இம்மன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

1) கடந்த 02.12.2023 –ம் தேதி மாலை 19.00 மணியளவில் திருவலம் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட சேர்க்காடு TO வள்ளிமலை செல்லும் சாலை, சேர்க்காடு புற்று கோயில் முன்பாக உள்ள வாராபதி பிரிட்ஜ் அருகில் சாட்சி –1 திருமதி. வசந்தா என்பவரது கணவர் கிருஷ்ணமூர்த்தி மேற்படி சாலையில் தெற்கிலிருந்து வடக்காக சாலையின் வலதுபுறம் ஓரமாக நடந்து செல்லும்போது, எதிரே வடக்கிலிருந்து தெற்காக சேர்க்காடு கூட்ரோடு நோக்கி வந்த AP 39 NB 9190 பதிவு எண் கொண்ட VXL Vespa இருசக்கர வாகனத்தை இக்குற்ற அறிக்கையில் குறிப்பிட்டுள்ள எதிரி துர்கா க/பெ. நேதாஜி என்பவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஆரன் அடிக்காமலும் ஓட்டி வந்து கிருஷ்ணமூர்த்தி மீது மோதி விபத்து ஏற்படுத்தியும், விபத்தின் காரணமாக கிருஷ்ணமூர்த்திக்கு முன் வலது பக்க தலையில் பலத்த இரத்த காயம் ஏற்பட்டு சிகிச்சையில் இருந்து வந்தவர் சிகிச்சை பலனின்றி 06.12.2023–ம் தேதி இரவு 23.45 மணியளவில் இறப்பு ஏற்பட காரணமாக இருந்தது பிரிவு 279, 304 (A) IPC–ன் படி தண்டிக்கப்படவேண்டிய குற்றம் புரிந்தவராகிறார். எனவே எதிரி துர்கா மீது பிரிவு 279, 304(A) IPC –ன் படி குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் குற்றமுறையிடுபவர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கி அவைகளை பரிசீலனை செய்து பார்க்க தகுந்த சந்தர்ப்பமும் வாய்ப்பும் அளித்து எதிரி மீதான குற்றங்கள் பற்றி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்தார். மேலும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் வழக்கிற்கான முகாந்திரம் உள்ளதால் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 279, 304(A)ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கிக் கூறி வினவியபோதும் எதிரி தான் குற்றவாளி இல்லை என்று கூறினார்.

3. எதிரி குற்றத்தை மறுத்துரைத்ததால் எதிரி மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்யும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டன.

**4.அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் மற்றும் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்**

அ)அ.சா.1 வசந்தா இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில் தான் தற்போது செவிடன்தாங்கலில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன் என்றும், விபத்தில் இறந்து போன கிருஷ்ணமூர்த்தி என்பவர் தனது

கணவர் என்றும், டிசம்பர் மாதம் 2 தேதி 2023 ம் வருடம் தான் வீட்டில் இருந்த போது தனது கணவருக்கு விபத்து ஏற்பட்டு ஆம்புலன்ஸில் உள்ளதாக தனக்கு தகவல் சொன்னார்கள். தான் சென்று பார்த்த போது தனது கணவருக்கு தலையில் இரத்தம் ஒழுகி கொண்டிருந்தது. தனது கணவரை வாலாஜா அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கே தனது கணவருக்கு நெற்றி பகுதியில் தையல் போட்டு மேற்சிகிச்சைக்காக வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு சிகிச்சையில் இருந்து 2 நாட்கள் கழித்து தனது கணவர் இறந்து விட்டார் என்றும், விபத்து பற்றி தனக்கு தெரியாது. சம்பவம் தொடர்பாக தான் புகார் மனு கொடுத்தேன். தன்னிடம் காட்டப்படும் புகார் மனு தன்னுடையது தான் என்றும், அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

ஆ) அ.சா.2 ஈஸ்வரன் இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில் தான் தற்போது செவிடன்தாங்கலில் வசித்து வருகிறேன். மரகடையில் வேலை செய்து வருகிறேன் என்றும், அ.சா.1 யை தெரியும் என்றும், விபத்தில் இறந்து போன கிருஷ்ணமூர்த்தி என்பவரைத் தெரியும் என்றும், 02.12.2023 ம் தேதி தான் திருவலத்தில் வேலை செய்து கொண்டு சேர்க்காடு நோக்கி சென்று கொண்டிருந்த போது மாலை 6.30 மணியளவில்

சேர்க்காடு கூட்டுரோடு புத்து கோவில் அருகே விபத்து ஏற்பட்டு இருந்தது. சம்பவ இடத்தில் AP 39 NB 9190 பதிவு எண் கொண்ட மில்க் ரோஸ்ட் நிறம் கொண்ட ஸ்கூட்டி போன்ற வாகனம் இருந்தது. தான் விபத்து பற்றி வசந்தா என்பவருக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். சம்பவ இடத்தில் பாலகிருஷ்ணன் என்பவரும் இருந்தார். பின்னர் 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் தெரிவித்தேன் கிருஷணமூர்த்தி என்பவருக்கு தலையிலும் நெற்றியிலும் காயம் ஏற்பட்டு இருந்தது. பின்னர் கிருஷ்ண மூர்த்தி இறந்து விட்டது சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும், பின்னாள் விபத்து ஏற்படுத்தியவர் பேங்க் மேனஜர் என்றும் அவருக்கும் அடிப்பட்டது என்றும் விபத்து ஏற்பட்ட அன்று அவர் இல்லை. போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

இ) அ.சா.3 எழிலன் இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில் தான் தற்போது திருவண்ணாமல மாவட்டம் மைநந்தல் கிராமத்தில் வசித்து வருகிறேன். வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன கிருஷ்ணமூர்த்தி என்பவர் தெரியும். அவர் தனது மாமா. அ.சா.1 யை தெரியும் அவர் தனது மாமியார். கடந்த 02.12.2023 ம் தேதி தான் தனது கிராமத்தில் இருந்தேன் என்றும், அப்போது ஈஸ்வரன் என்பவர் தனது மாமாவிற்கு விபத்து ஏற்பட்டதாக போன் மூலமாக தகவல் சொன்னார். தான் நேராக வாலாஜா அரசு மருத்துவமனைக்கு

சென்று பார்த்தேன். அங்கிருந்து மேற்சிகிச்சைக்காக வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அனுப்பி இருந்தார்கள். மேற்படி மருத்துமனைக்கு சென்று பார்த்த போது தனது மாமானர் மயக்க நிலையில் இருந்தார். தலையில் அடிப்பட்டு இருந்தது. ஸ்கேன் எடுத்து பார்த்தார்கள். மூளையில் இரத்த கசிவு ஏற்பட்டு உள்ளதாக சொன்னார்கள். இரணடு நாட்கள் கழித்து தான் சிகிச்சை பற்றி கூறமுடியும் என்று கூறினார்கள். பின்னர் தனது மாமா 6ம் தேதி இறந்து விட்டார். போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

ஈ) அ.சா.4 பன்னீர் செல்வம் தான் தற்போது வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் தனிப்பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 04.12.2023 ம் தேதி காலை 09.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது வசந்தா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைபடி நிலைய குற்ற எண்.573/2023 சட்டப்பிரிவு 279, 337 இதச பிரிவின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும்,அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், அந்த முதல் தகவல் அறிக்கையும், புகார் மனுவையும் பெற்று நீதிமன்றம் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை தன்னுடைய விசாரணைக்கு எெடுத்துக் கொண்டு அன்றைய தினமே காலை 10.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சூரி, ரமேஷ்

ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தையும், சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தேன் என்றும், அது முறையே அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்னர் வழக்கு கோப்பை தொடர் புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் சிலம்பரசன் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும்,சாட்சியம் அளித்துள்ளார்.

உ) அ.சா.5 சிலம்பரசன் தான் தற்போது வேலூர் மாவட்ட மதுவிலக்கு அமலாக்க பிரிவில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 04.12.2023 ம் தேதி காலை 09.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் பன்னீர்செல்வம் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது வசந்தா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று முதல் புலன் விசாரணை முடித்து சிறப்பு உதவி ஆய்வாளர் பன்னீர் செல்வம் என்பவர் எனது பார்வைக்காக வைத்த வழக்கு கோப்பை தான் தனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு வழக்கில் காயம்பட்டு சிகிச்சையில் இருந்த நபர் 06.12.2023 ம் அன்று சிகிச்சை பலனின்றி இரவு 11.45 மணிக்கு இறந்து விடவே மருத்துவ தகவலை பெற்று வழக்கின் சட்டப்பிரிவை 279, 337 இதச விலிருந்து 279, 304(A) இதச வாக சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றம் அனுப்பி வைத்தேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு

செய்யப்படுகிறது. பின்னர் மேற்படி பஞ்சாயத்தார் சாட்சிகளின் முன்னிலையில் விபத்தில் இறந்த போன கிருஷ்ணமூர்த்தி என்பவரின் பிரேதேத்தின் மீதான பிரதே விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்னர் விபத்தில் இறந்து போன கிருஷ்ணமூர்த்தி என்பவரின் உடலை உடற் கூராய்வு செய்வதற்காக வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு தலைமை காவலர் மணி என்பவர் மூலமாக வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்தேன். பின்னர் வழக்கின் எதிரி துர்கா என்பவரை காரணம் கூறி கைது செய்து தக்க இரு நபர் ஜாமீனில் விடுவித்தேன். AP39 NB 9190 VXL Vespa என்ற இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வுக்கு உட்படுத்தி ஆய்வறிக்கை பெற்றேன். அந்த ஆய்வறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கின் தன்மையானது காவல் ஆய்வாளர் விசாரிக்க கூடிய வழக்கு என்பதால் வழக்கு கோப்பை நிலையம் வைத்தேன். காவல் ஆய்வாளர் திரு தமிழ்செல்வன் தனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 10 வரை விசாரணை செய்ததில் ஏற்கனவே கூறியதையே மீண்டும் கூறியதால் தனியாக மறுவாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்னர் உடற்கூராய்வு செய்த மருத்துவர் கலைச்செல்வி விசாரித்து

உடற்கூராய்வு சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், அந்த உடற்கூறாய்வு சான்றிதழ் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்னர் சாட்சிகள் மணி, பன்னீர்செல்வம், ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது 279, 304(A) இதசவின் படி 13.02.2024 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**5.** இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு பாதகமானவற்றைத் தொகுத்து எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(பி)ன் படி வினவியபோது எதிரி அவைகளை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறியதால் எதிரி தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

**6. கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞரின் வாதம்**

அரசு தரப்பில் ஆஜரான கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தின்போது அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் மூலம், சம்பவ நேரத்தில் வடக்கிலிருந்து தெற்காக சேர்க்காடு கூட்ரோடு நோக்கி வந்த AP 39 NB 9190 பதிவு எண் கொண்ட VXL Vespa இருசக்கர வாகனத்தை இக்குற்ற அறிக்கையில் குறிப்பிட்டுள்ள எதிரி துர்கா க/பெ. நேதாஜி என்பவர் அதிவேகமாகவும்,

அஜாக்கிரதையாகவும், ஆரன் அடிக்காமலும் ஓட்டி வந்து கிருஷ்ணமூர்த்தி மீது மோதி விபத்து ஏற்படுத்தியும், விபத்தின் காரணமாக கிருஷ்ணமூர்த்திக்கு முன் வலது பக்க தலையில் பலத்த இரத்த காயம் ஏற்பட்டு சிகிச்சையில் இருந்து வந்தவர் சிகிச்சை பலனின்றி இறப்பு ஏற்பட காரணமாக இருந்ததாக அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரியை குற்றவாளி என முடிவு செய்து அதிகபட்ச சிறைதண்டனையும், அபராதமும் விதிக்குமாறு வாதம் செய்தார்.

## 7. கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞரின் வாதம்

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி கண்ணுற்று சாட்சியை விசாரித்தபோதிலும் அவர் எதிரிதான் சம்பவத்தை ஏற்படுத்தினார் என்று எதிரியை அடையாளப்படுத்தவில்லை என்றும் நடந்த விபத்தில் வடக்கிலிருந்து தெற்காக சேர்க்காடு கூட்ரோடு நோக்கி வந்த AP 39 NB 9190 பதிவு எண் கொண்ட VXL Vespa இருசக்கர வாகனத்தை இக்குற்ற அறிக்கையில் குறிப்பிட்டுள்ள எதிரி துர்கா க/பெ. நேதாஜி என்பவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஆரன் அடிக்காமலும் ஓட்டி வந்து கிருஷ்ணமூர்த்தி மீது மோதி விபத்து ஏற்படுத்தியும், விபத்தின் காரணமாக கிருஷ்ணமூர்த்திக்கு முன் வலது பக்க தலையில் பலத்த இரத்த காயம் ஏற்பட்டு சிகிச்சையில் இருந்து வந்தவர் சிகிச்சை பலனின்றி இறப்பு ஏற்பட காரணமாக இருந்ததாக அரசு தரப்பில்

நிரூபிக்கப்படவில்லை என்றும் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் இறந்து போனவரின் குடும்பத்திற்கு விபத்து நஷ்டஈடு பெறுவதற்காக எதிரியின் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து இவ்வழக்கிலிருந்து விடுவித்து உத்தரவிடவேண்டுமென வாதம் செய்தார்.

8. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில், அரசு தரப்பில் எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றமானது அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதுவேயாகும்.

9. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இவ்வழக்கில் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101 ன் படி எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டினை நிரூபிக்கும் பொறுப்பு அரசு தரப்பை சார்ந்ததாகும். எதிரி அவரின் வாகனத்தை கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும, ஓட்டி வந்து கிருஷ்ணமூர்த்தி மீது மோதி விபத்து ஏற்படுத்தி மரணம் ஏற்பட்டுள்ளதா என்பது தான் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றமாகும்.

10. அ.சா.1 இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் கேள்விபட்ட சாட்சி ஆவார். அவர் தனது சாட்சியத்தில் டிசம்பர் மாதம் 2 தேதி 2023 ம் வருடம் தான் வீட்டில் இருந்த போது தனது கணவருக்கு விபத்து ஏற்பட்டு ஆம்புலன்ஸில் உள்ளதாக தனக்கு தகவல் சொன்னார்கள். தான் சென்று பார்த்த போது தனது கணவருக்கு தலையில் இரத்தம் ஒழுகி கொண்டிருந்தது. தனது கணவரை வாலாஜா அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கே தனது கணவருக்கு நெற்றி பகுதியில் தையல் போட்டு மேற்சிகிச்சைக்காக வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு சிகிச்சையில் இருந்து 2 நாட்கள் கழித்து தனது கணவர் இறந்து விட்டார் என்றும், விபத்து பற்றி தனக்கு தெரியாது. சம்பவம் தொடர்பாக தான் புகார் மனு கொடுத்தேன். தன்னிடம் காட்டப்படும் புகார் மனு தன்னுடையது தான் என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

11. அ.சா.2 இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சி ஆவார். அவர் தனது சாட்சியத்தில் 02.12.2023 ம் தேதி தான் திருவலத்தில் வேலை செய்து கொண்டு சேர்க்காடு நோக்கி சென்று கொண்டிருந்த போது மாலை 6.30 மணியளவில் சேர்க்காடு கூட்டுரோடு புத்து கோவில் அருகே விபத்து ஏற்பட்டு இருந்தது. சம்பவ இடத்தில் AP 39 NB 9190 பதிவு எண் கொண்ட மில்க் ரோஸ்ட் நிறம் கொண்ட ஸ்கூட்டி போன்ற வாகனம் இருந்தது

என்றும், தான் விபத்து பற்றி வசந்தா என்பவருக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். சம்பவ இடத்தில் பாலகிருஷ்ணன் என்பவரும் இருந்தார். பின்னர் 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் தெரிவித்தேன் கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு தலையிலும் நெற்றிலும் காயம் ஏற்பட்டு இருந்தது. பின்னர் கிருஷ்ணமூர்த்தி இறந்து விட்டது சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும், பின்னாள் விபத்து ஏற்படுத்தியவர் பேங்க் மேனஜர் என்றும் அவருக்கும் அடிப்பட்டது என்றும் விபத்து ஏற்பட்ட அன்று அவர் இல்லை. போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

12. அ.சா.3 கேள்விபட்ட சாட்சி ஆவார். அவர் தனது சாட்சியத்தில் கடந்த 02.12.2023 ம் தேதி தான் தனது கிராமத்தில் இருந்தேன் என்றும், அப்போது ஈஸ்வரன் என்பவர் தனது மாமாவிற்கு விபத்து ஏற்பட்டதாக போன் மூலமாக தகவல் சொன்னார். தான் நேராக வாலாஜா அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அங்கிருந்து மேற்சிகிச்சைக்காக வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அனுப்பி இருந்தார்கள். மேற்படி மருத்துமனைக்கு சென்று பார்த்த போது தனது மாமானர் மயக்க நிலையில் இருந்தார். தலையில் அடிப்பட்டு இருந்தது. ஸ்கேன் எடுத்து பார்த்தார்கள். மூளையில் இரத்த கசிவு ஏற்பட்டு உள்ளதாக சொன்னார்கள். இரணடு நாட்கள் கழித்து தான்

சிகிச்சை பற்றி கூறமுடியும் என்று கூறினார்கள். பின்னர் தனது மாமா 6ம் தேதி இறந்து விட்டார். போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

13. அ.சா.4 மற்றும் அ.சா.5 இவ்வழக்கின் விசாரணை அதிகாரி ஆவார். அவர் தனது சாட்சியத்தில் புகார்தாரரின் புகார் மனுவை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தததைப் பற்றியும், சம்பவம் இடம் சென்று மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்ததை பற்றியும், பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்ததை பற்றியும், பஞ்சாயத்தார் அறிக்கை தயார் செய்தததை பற்றியும், இறந்த நபருக்கு உடற்கூறாய்வு சான்றிதழ் பெற்றதைப் பற்றியும், பின்னர் விபத்து ஏற்படுத்திய மோட்டார் வாகனத்தை வாகன ஆய்வுக்கு உட்படுத்தி ஆய்வறிக்கை பெற்றதை பற்றியும், விபத்து பதிவேடு அறிக்கை பதிவு செய்து மருத்துவரை விசாரித்து காயச்சான்று வாக்குமூலம் பதிவு செய்தததை பற்றியும், இறுதியாக இறுதி அறிக்கை தாக்கல் செய்ததை பற்றியும் தாக்கல் செய்துள்ளார். அவரது சாட்சியம் வழக்கு விசாரணைக்கு ஒத்தியதே ஆகும்.

14). அ.சா.1 இவ்வழக்கில் புகார்தாரர் ஆவார். அ.சா.1 விபத்து பற்றி தனக்கு நேரடியாக தெரியாது என்றும், தகவல் சொல்லிதான் தனக்கு தெரியும் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

15) அ.சா.2 விபத்தை தான் நேரடியாக பார்க்கவில்லை என்றும், விபத்து நடந்து முடிந்த பின்தான் தான் சம்பவ இடம் சென்றேன் என்றும், சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 விபத்து ஏற்பட்டதாக தனக்கு போன் மூலம் தான் தகவல் சொல்லி தெரியும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 மற்றும் அ.சா.5 புலன்விசாரணை அதிகாரி என்ற அடிப்படையிலும் சாட்சியம் அளித்துள்ளனர். எனவே எதிரியை அடையாளபடுத்தி எதிரி தான் விபத்தை ஏற்படுத்தினார் என்று எந்தவொரு சாட்சியமும் அரசு தரப்பிற்கு சாதகமாக சாட்சியம் அளிக்கவில்லை.

16. இந்த வழக்கில் விபத்தை நேரிடையாக பார்த்த கண்ணுற்ற சாட்சியும், எதிரியை அடையாளப்படுத்தி சாட்சிகள் சாட்சியம் அளிக்கவில்லை. அது மட்டுமல்லாது எதிரியை யாரும் அடையாளம் காட்டி எதிரிதான் அந்த விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுனராக இருந்தார் என்றும், மேற்படி இவ்வழக்கில் நடந்த விபத்தில் சாட்சி –1 திருமதி. வசந்தா என்பவரது கணவர் கிருஷ்ணமூர்த்தி மேற்படி சாலையில் தெற்கிலிருந்து வடக்காக சாலையின் வலதுபுறம் ஓரமாக நடந்து செல்லும்போது, எதிரே வடக்கிலிருந்து தெற்காக சேர்க்காடு கூட்ரோடு நோக்கி வந்த AP 39 NB 9190 பதிவு எண் கொண்ட VXL Vespa இருசக்கர வாகனத்தை இக்குற்ற அறிக்கையில் குறிப்பிட்டுள்ள எதிரி துர்கா க/பெ. நேதாஜி என்பவர்

அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஆரன் அடிக்காமலும் ஓட்டி வந்து கிருஷ்ணமூர்த்தி மீது மோதி விபத்து ஏற்படுத்தியும், விபத்தின் காரணமாக கிருஷ்ணமூர்த்திக்கு முன் வலது பக்க தலையில் பலத்த இரத்த காயம் ஏற்பட்டு இறப்பு ஏற்பட காரணமாக இருந்ததாக அரசு தரப்பு சாட்சிகள் யாரும் வலியுறுத்தி சாட்சியம் அளிக்கவில்லை. புலன் விசாரணை செய்த விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரியின் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் மெய்ப்பிக்கப்பட்டுவிட்டதாக யூகித்துக் கொள்ள இயலவில்லை. எனவே, மேலே கண்ட காரணங்களினால் அரசு தரப்பு வழக்கில் எழும் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை விடுதலை செய்து தீர்ப்பு அளிப்பது நீதி நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

17. முடிவாக எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 279, 304(A) IPC –ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச. 255(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஜூன் மாதம் 01 ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இத்தீர்ப்பு என்னால் பகரப்பட்டது.

S K P DILIP BABU Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.

**அரசு தரப்பு சாட்சிகள்**

| வ.எண் | சாட்சிகளின் விபரம் |
|---|---|
| அ.சா.1 | வசந்தா |
| அ.சா.2 | ஈஸ்வரன் |
| அ.சா.3 | எழிலன் |
| அ.சா.4 | பன்னீர்செல்வம் |
| அ.சா.5 | சிலம்பரசன் (விசாரணை அதிகாரி) |

**அரசுதரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.4 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |
| அ.சா.ஆ.6 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.7 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை ( AP39 NB 9190 VXL Vespa ) இருசக்கர வாகனம் |
| அ.சா.ஆ.8 | உடற்கூறாய்வு சான்றிதழ் |

எதிரிகள் தரப்பு சாட்சி : இல்லை

எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை

சான்று பொருட்கள் : இல்லை

**<u>குறிப்பு</u>**

1. வழக்கின் முடிவு சம்பந்தப்பட்ட காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2. எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல்நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

3. விசாரணை காலத்தில் எதிரிகள் காவல்நிலைய பிணையில் இருந்தார்.

S K P DILIP BABU Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.